


சென்னை, அண்ணா நிருவாக பணியாளர் கல்லூரியில் நேற்று முன்தினம் (26.4.2025) நடைபெற்ற “நான் முதல்வன் திட்டம்” மற்றும் தமிழ்நாடு அரசால் நடத்தப்பட்டு வரும் அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்று இந்திய குடிமைப் பணி தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கான பாராட்டு விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் குடிமைப் பணி தேர்வில் தேர்ச்சி பெற்ற வெற்றியாளர்கள் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். இந்த நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், அண்ணா நிருவாக பணியாளர் கல்லூரியின் கூடுதல் தலைமைச் செயலாளர் / பயிற்சித் துறை தலைவர் விக்ரம் கபூர், மனிதவள மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் கோ. பிரகாஷ், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி, நான் முதல்வன் போட்டி தேர்வு சிறப்பு திட்ட இயக்குநர் சி.சுதாகரன், IRPS ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (26.4.2025) தலைமைச் செயலகத்தில், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு 2025–2026 ஆம் ஆண்டிற்கான நிதித்துறை, ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியகால நன்மைகள், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (26.4.2025) தலைமைச் செயலகத்தில், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு 2025–2026 ஆம் ஆண்டிற்கான நிதித்துறை, ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியகால நன்மைகள் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், சிறப்பு செயலாளர்கள் பிரசாந்த் மு.வடநெரே, அருண் சுந்தர் தயாளன், துணைச் செயலாளர் செ.ஆ. ரிஷப், கருவூலம் மற்றும் கணக்குகள் துறை இயக்குநர் திருமதி தி. சாருஸ்ரீ மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (26.4.2025) தலைமைச் செயலகத்தில், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் 2025–2026 ஆம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (26.4.2025) தலைமைச் செயலகத்தில், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் 2025–2026 ஆம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, தாட்கோ தலைவர் நா. இளையராஜா, ஆதிதிராவிடர் நலத் துறை ஆணையர் த.ஆனந்த், தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி, பழங்குடியினர் நல இயக்குநர் எஸ்.அண்ணாதுரை, சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு காவல்துறை தலைவர் மரு. மகேந்திர குமார் ரத்தோட் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (26.4.2025) தலைமைச் செயலகத்தில், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு 2025–2026 ஆம் ஆண்டிற்கான சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை இயக்குநர் ஆ.ர. ராகுல்நாத், சிறப்பு செயலாளர் (சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம்) அனுராக் மிஸ்ரா, சிறப்பு செயலாளர் (வனம்) தெ. ரிட்டோ சிரியாக், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் தலைவர் முனைவர் ஜெயந்தி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



திருச்சியில் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என். நேரு, உறையூரில் உள்ள மிண்ணப்பன் தெருவில் குடிநீரில் கழிவுநீர் கலந்ததாக வந்த புகாரை ஒட்டி வீடு வீடாக நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார் உடன் மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார், மாநகராட்சி ஆணையர் சரவணன், மாநகராட்சி மேயர் அன்பழகன், நகரப் பொறியாளர் சிவபாதம், மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி மாவட்டத் துணைச் செயலாளர் முத்துச்செல்வம், சேர்மன் துரைராஜ் , குடமுருட்டி சேகர், மற்றும் கழக நிர்வாகிகள் கண்ணன், இளங்கோ திருநாவுக்கரசு, ஹரி உள்ளிட்ட பலர் சென்றனர்.



திருச்சி தெற்கு மாவட்டம், மாநகர தி.மு.க. சார்பாக, முதல்வர் பிறந்த நாள் விழா மாபெரும் கருத்தரங்கம் திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. இதில் அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நடிகர் எஸ்.வி.சேகர், புலவர் சண்முகவடிவேல், செல்வி. சமிதா பாண்டியன், ஆகியோர் பங்கேற்று சிறப்புரை ஆற்றினார்கள். உடன் நூர்கான், மு.மதிவாணன், ஆறு.சந்திரமோகன், சேகரன், சபியுல்லா, கவிஞர் சல்மா, செந்தில், திவ்யா, மோகன் மற்றும் பலர் உள்ளனர்.



சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டம், கஞ்சநாயக்கன்பட்டி கிராமத்தில் பட்டாசு வெடிவிபத்து நடைபெற்ற இடத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேரில் ஆய்வு மேற்கொண்டார். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் சுகுமார் மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்கள் உள்ளனர்.



கோவை மாவட்டம், சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதி, 27 வது வார்டு பீளமேடு ரங்கம்மாள் கோவில் வீதியில் மாமன்ற உறுப்பினர் அம்பிகா தனபால் ஏற்பாட்டில் வார்டு பொது நிதி ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் துவக்கி வைத்தார். இதில் பீளமேடு துரை.செந்தமிழ்ச்செல்வன், இரா.தனபால், செந்தில்குமார், லோகேஸ்வரி, பூ.வெ.துரைசாமி, பூவை சுரேஷ், ரமேஷ்குமார், வேலுச்சாமி, கிருஷ்ணமூர்த்தி, கங்குவார் சீனு, மில் ரவி, பொருளாளர் அங்கமுத்து, ஐயப்பன், அன்பரசி, திலகவதி, விஜயா தேவி உள்பட பலர் கலந்து கொண்டனர்.